## 28.9 மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலை குழுவின் பரிந்துரைகள் மீது அரசு ஆணைகள்

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வள (காப 2) துறை

அரசாணை (நிலை) எண்.166 நாள் : 27.07.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.200–கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை நாள்.22.08.97.
2. அரசாணை (நிலை) எண்.320–ஊரக வளர்ச்சித் துறை, நாள்.11.01.97
3. அரசாணை (நிலை)எண்.100–ஊரக வளர்ச்சித் துறை, நாள்.22.05.98
4. ஊரக வளர்ச்சித்துறை செயலரின் நேமுக.14532/சி4/99, நாள்.11.05.99.

**ஆணை**

பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில், மாநில திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று முதற்கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய பார்வை 2–மற்றும் 3–ல் படிக்கப்பட்ட அரசு ஆணைகளில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு உயர்நிலைகுழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 11.1.99–அன்று அரசுக்கு சமர்ப்பித்தது.

2) உயர்நிலைக்குழு அறிக்கை, இயல் III ல் ‘‘4–கால்நடை பராமரிப்பு பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணை மற்றும் 12. விறகு மற்றும் தீவனம்’’ என்ற தலைப்புகளில் உள்ள பரிந்துரைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து பின்னர் ஏற்றுக் கொண்டுள்ள பரிந்துரைகளை இவ்வாணையில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 1– மற்றும் அட்டவணை 2–ல் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஒப்படைப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

3) மேலும், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கால்நடை துறையை பொருத்த ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள் அட்டவணை 3–ல் கண்டுள்ளவாறு வழங்கி அரசு ஒப்புதல்அளிக்கிறது.

4) இவ்வாணை ஊரக வளர்ச்சி துறையில் அ.சா.கு..எண்.21903/சி4/99.1 நாள்.17.06.99–ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்

# 28. DEVOLUTION OF POWERS

## அட்டவணை 1
## கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை மற்றும் கோழி வளர்ப்பு
### கிராம ஊராட்சிகள்

01.கால்நடை மற்றும் கோழி இனங்களை நல்லமுறையில் பராமரிக்க, கால்நடைகளுக்கு நோய் மற்றும் தொற்று நோய் பற்றிய விபரங்களை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநரிடமோ, ஊராட்சி ஒன்றிய கால்நடை விரிவாக்க அலுவலரிடமோ தெரியப்படுத்தலாம்.

02. இறைச்சி வெட்டும் கூடங்களில் நடக்கும் பணிகளை கால்நடை உதவி மருத்துவரின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் அவ்வப்போது மேற்பார்வையிட்டு குறிப்புகளை பதிவு செய்யலாம்.

03. இறைச்சி வெட்டும் கூடங்களை நல்ல முறையில் பராமரிக்கலாம்.

04. கிராம பொது நிலங்களில் (புறம்போக்கு) கால்நடை தீவன மரங்களை வளர்த்து தீவன உற்பத்தியை பெருக்கலாம்.

05. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து கால்நடை தீவன மரங்களை வளர்க்க சமுதாய நிலங்களை வாங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

06. உள்ளூரில், தீவன வங்கி ஏற்படுத்தி வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களில் தீவனத்தை பங்கிட்டு அளிக்க ஏற்பாடு செய்யலாம்.

07. தீவன விதைகள், தீவன மரக்கன்றுகளை கிராம மக்களுக்கு பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யலாம்.

08. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், பால் சேகரிக்கும் மையங்கள் மற்றும் கோழியின நிலையம் போன்றவற்றுக்குத் தேவையான வசதி செய்து தரலாம்.

09. உள்நாட்டு இனப் பெருக்க கால்நடை மேம்பாடு / தீவனம் மற்றும் தீவன விதை மேம்பாட்டுத் திட்டம், கால்நடைகளுக்கும் பறவைகளுக்கும் தடுப்பூசி போடுதல் சிறப்பு கூறு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களில் பயன்பெறும் பயனாளிகளைக் கண்டறிய உதவலாம்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

01.உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப, கால்நடை மருந்தகங்கள் அமைத்தல் மற்றும் மருத்துவப் பணிகள் ஆகிய பணிகளை தேசிய வேளாண்மை குழுவில் வழிகாட்டி நெறிமுறைப்படி கால்நடை மருத்துவப் பணிகள் துறையுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளலாம்.

02. தற்போது இயங்கி வரும் கால்நடை மருந்தகங்களை சீராக பராமரிக்கலாம்.

03. பல்வேறு திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு தரமான கால்நடைகளை விநியாகம் செய்யலாம்.

04. நல்ல தரமான உயர்ரக கால்நடைகளைப் பற்றி விவசாயிகளிடம் செய்தி பரப்பலாம்.

05. கால்நடை மேம்பாட்டுப் பணிகளை மேற்பார்வையிடும் பணியை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கலாம்.

06. கால்நடைகளுக்கு ஊராட்சி ஒன்றிய பகுதியில் நோய்கள், குறிப்பாக தொற்று நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம்.

07. கோழி வளர்ப்பவர்களுக்கு பயிற்சி அளிக்கவும், கோழி தீவனம் வழங்கவும் ஆவன செய்யலாம்.

### மாவட்ட ஊரட்சிகள்

01.உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப மாவட்ட ஊராட்சிகளில் மருத்துவப் பணிகள் மற்றும் கால்நடை பெருக்கத்திற்கு விவசாயிகளின் ஆண்டு விழா ஏற்பாடு செய்து, தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கல்லூரியின் கண்டுபிடிப்புகளையும் தொழில் நுட்பங்களையும் பரப்புதல்.

02. கால்நடை மேம்பாட்டுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை காலாண்டுக்கொருமுறை கால்நடை இணை/உதவி இயக்குநர் உடன் இணைந்து வேளாண்மை நிலைக்குழு ஆய்வு செய்யலாம். வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாக மாவட்டங்களில் செயல்படும் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களை காலாண்டுக்கு ஒருமுறை ஆய்வு செய்தல், அவ்வாய்வு கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இணை/துணை இயக்குநர் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொள்ளலாம்.

03. சிறப்பு பகுதி மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்களின் மேம்பாட்டு திட்டத்தின் கீழான திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இதர திட்டங்களை மேற்பார்வை செய்யலாம்.

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்

## அட்டவணை 2.

## விறகு மற்றும் தீவனம்

### கிராம ஊராட்சிகள்

01.கிராம மக்களின் தேவைக்கேற்ப எரிபொருள், மரங்கள் (விறகு) கால்நடைகளுக்குத் தேவையான தீவனப்பயிர் ஆகியவற்றை கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நிலங்களில் வளர்க்க கால்நடை பராமரிப்பு / வனத்துறைகளின் ஆலோசனையின்படி தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

02. கால்நடை பராமரிப்பு இணை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கும் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தில் செயல்படும் தீவன மேம்பாட்டுத் திட்டத்திற்கு தேவையான தீவன மரச் செடிகள், தொட்டி செடிகள் வழங்குவதை மேற்பார்வையிடுதல் மற்றும் உதவி புரிதல்.

### ஊராட்சி ஒன்றியங்கள்.

01.தீவன உற்பத்தியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு மண்டல இணை இயக்குநர்/உதவி இயக்குநர் ஆலோசனையின் பேரில் மரங்கள் மற்றும் மாட்டுத் தீவனம் உற்பத்தியை பெருக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு நிலங்களை அடையாளம் கண்டு இதற்கென தனியே ஒதுக்கலாம்.

02. கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர், வனத்துறை அலுவலர் உதவியுடன் தீவனத்திற்கு பயன்படும் மரங்களை இனங்கண்டு பயிரிடலாம் மற்றும் நேரிடையாக ஆய்வு மேற்கொள்ளலாம்.

03. சமூக தரிசு நிலங்களில் பயிர் செய்யும் தீவன மரங்களின் உற்பத்தியில் நேரிடையாக ஈடுபட்டு மேற்பார்வையிடலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

01.மாவட்ட ஊராட்சிப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களில் கால்நடை தீவன மரங்களை வளர்த்து தீவன உற்பத்திகளைப் பெருக்கலாம். இதுபோன்ற பணியினை மாவட்ட ஊராட்சிகள் திட்டமிடலாம்.

02. கால்நடை பராமரிப்பு இயக்குநர் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெரிய அளவில் கால்நடை தீவன உற்பத்தியைப் பெருக்க தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்

## அட்டவணை.3.

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள்.

### மாவட்ட ஊராட்சிகள்.

01. திட்டங்கள் தேர்நதெடுக்கப்பட்ட பகுதிகளில் மாடுகளுக்கும் எருமைகளுக்கும் ஊசி போடுதல் பற்றி இணை இயக்குநர் கால்நடைஅவர்களுடன்ஆய்வு செய்யலாம்

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்